நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 104 of 2020

## P.W. 6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கார்த்திக் |
| தந்தை / கணவர் பெயர் | : | கிருஷ்ணன் |
| கிராமம் | : | காவேரிகிராஸ் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 6** |
| வயது | : | 31 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், மே மாதம், 26–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**3 எதிரி ஆஜர் மற்ற எதிரிகள் ஆஜரில் இல்லை. கு.வி.ந.மு. 317 தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.02 p.m.,)

1. நான் தற்போது காவேரிகிராஸில் குடியிருக்கிறேன். வெல்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி குடும்பத்தாருக்கும் அ.சா.1ன் குடும்பத்தாருக்கும் பொது வழியில் நடப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. எதிரிகள்

குடும்பத்தினர் பிரச்சனைக்குரிய பாதையில் முட்களை வெட்டி போட்டு இருந்தனர். அ.சா.1 அந்த வழியில் போகும் போது முட்களை எடுத்து வெளியே எடுத்து வீசி சென்றுவிட்டார். 03.11.2019 ம் தேதி மாலை 06.30 மணியளவில் அ.சா.1 வீட்டில் சுடு தண்ணீர் காயவைத்துக்கொண்டிருந்தபோது எதிரி மோகன் ராஜ் தேவடியா பசங்களா, கண்டராஓலி பசங்களா எவண்டா ரோட்டில் இருந்த முட்களை எடுத்தது என்று பொதுவாக பேசினார்.

2. தங்கராஜ் நான் தான் எடுத்து முள்ளை போட்டேன் என்று சொன்னார். எதிரி ரமேஷ் கல்லால் அ.சா.1 ன் தலையில் அடித்தார். எதிரி ராமன் கல்லால் அ.சா.1 ன் மூக்கிலும், நெற்றியிலும் குத்தினார். சண்டையை தடுக்க வந்த மணிவண்ணன் என்பவரை ரமேஷ் கல்லால் தலையில் அடித்தார். எதிரி மோகன்ராஜ் குண்டாவால் மணிவண்ணனை தலையிலும் முதுகிலும் அடித்தார். எதிரி சேகர் அ.சா.1 யை யைால் அடித்தார்.

3. காயம்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 யை மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தோம். அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். தங்கராஜயும் மணிவண்ணயையும் அடித்த நபர்களை எனக்கு அடையாளம் தெரியும். அதில் ஒரு நபர் சேகர் தான் இன்று ஆஜரில் உள்ளார். (மற்ற எதிரிகள் இன்று ஆஜரில் இல்லாததால் சாட்சியால் அடையாளம் காட்ட இயலவில்லை). எதிரி ரமேஷ் மற்றும் ராமன் இருவரும் அ.சா.1 யை பார்த்து இன்றைக்கு தப்பித்துக்கொண்டீர்கள் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என் வீட்டிற்கும் தங்கராஜ் வீட்டிற்கு சுமார் 100 அடி தூரம் இருக்கும். எனது சித்தபா பெயர் ஆறுமுகம். ஆறுமுகமும் தங்கராஜ் இடையே 4 வீடு தள்ளி இருவரும் குடியிருந்து வருகிறார்கள். நான் சம்பவம் சமயத்தில் வெல்டிங் வேலை லோக்கலில் தான் காவேரி கிராஸ் முனியப்பன் கோயில் அருகில் செய்து வந்தேன். தற்போது நான் சேலத்தில் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். வழக்கமாக வேலை முடித்து விட்டு மாலை 05.00 மணிக்கு வீட்டிற்கு

சென்றுவிடுவேன். தங்கராஜ் மற்றும் மணிவண்ணனும் எனக்கு அண்ணன் முறை ஆவார்கள். காவல் துறை விசாரணையில் மேற்படி இருவர்கள் எனது உறவினர்கள் என்று நான் சொல்லவில்லை.

2. நான் சொன்ன பொது வழி தங்கராஜ் வீட்டிற்கு பின்புறமாக மேற்கிலிருந்து கிழக்காக செல்கிறது. தங்கராஜ் தனது வீட்டிலிருந்து செல்ல வடக்கு தெற்காக செல்லும் வீதியில் தான் செல்வார் என்றால் சரியல்ல. அதிலும் போவார் பின்புறம் உள்ள வழியிலும் போவார். தங்கராஜ் வீட்டிற்கு பின்புறமாக உள்ள பாதை ஆஜர் எதிரி சேகரின் வீட்டுடன் முடிகிறது என்றால் சரிதான். சேகர் வீட்டிற்கு கிழக்கே மாது என்பவரின் பட்டா நிலம் உள்ளது என்றால் தெரியாது. அந்த இடத்தை இயற்கை உபாதைகள் கழிப்பதற்காக பொது மக்கள் பயன்படுத்துவார்கள். அது விவசாயம் நிலம் என்றால் சரியல்ல.
3. சேகர் வீட்டிற்கு அருகில் பாதை முடியும் இடத்தில் தென்வடலாக காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த காம்பவுண்டை மாது தான் கட்டினார் என்றால் எனக்கு தெரியாது. நானும் அதே ஊரைச் சேர்ந்தவர் தான். தங்கராஜ் வீட்டிற்கு பின்புறமாக செல்லும் சாலையில் நேராக மேற்காக சென்றால் ஒரு கரடு உள்ளது என்றால் சரிதான். இந்த சண்டை ஒரு மூக்கால் மணி நேரம் நடந்திருக்கும்.
4. அந்த இடத்தில் நானும் சிவராஜ், செல்வராஜ் மற்றும் பொது மக்கள் கூட்டமாக இருந்தனர். நான் கல் எடுத்து அடித்தாக சொன்ன 2 எதிரி ரமேஷ் சென்னையில் காவல் துறையில் பணிபுரிகிறார் என்றால் சரிதான். தங்கராஜ் வீட்டிற்கு மேற்கு திசையில் உள்ள வீடு ஆறுமுகம் என்பவருக்கு சொந்தமானது. அவர் என்னுடைய சித்தப்பா அல்ல. தங்கராஜ், மணிவண்ணன் மற்றும் எலிசபெத் ராணி 3 பேரும் சேர்ந்து இந்த வழக்கின் எதிரிகளை அடித்துவிட்டு அவர்கள் மீது பொய் புகார் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல.
5. நான் மருத்துவனைக்கு தங்கராஜின் இருச்சக்கர வாகனத்தை நான் ஓட்டிக்கொண்டு தங்கராஜை நான் மருத்துவமனையில் சேர்த்தேன். மணிவண்ணனை சிவராஜ் மருத்துவமனைக்கு கொண்டுச் சேர்த்தார். சிவராஜ் என்னுடைய உறவினர்தான் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சென்ன சமயத்தில் சொன்ன நேரத்தில் அந்த மாதிரி சம்பவம் நடைப்பெறவில்லை

என்றாலும் தங்கராஜ் ஏற்கனவே வீதியை ஆகரமிப்பு சம்மந்தமாக புகார் அளித்தது தொடர்பாக முன்விரோதத்தை மனத்தில் வைத்துக்கொண்டு சேகர் அவருடைய நில எல்லைக்குள் போட்டிருந்த முள்ளை எடுத்துவிட்டு சேகரின் 2 மகன்களை அடித்துவிட்டு அதில் இருந்து தப்பிக்க வேண்டி பொய் புகார் அளித்துள்ளார் என்றாலும், நான் சொன்னாவறு தங்கராஜ் வீட்டிற்கு பின்புறம் எந்த விதமாக பொது வழியும் இல்லை என்றாலும் தங்கராஜ் மணிவண்ணனும் எனது அண்ணன் முறை என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—01.30 p.m.,

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/—நா.கோகுலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**